வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 23.10.2025 வியாழக்கிழமை இதழ் : 296 பக்கங்கள் : 08

## சீரற்ற வானிலை; 4 பேர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 23

நாட்டில் தொடரும் சீரற்ற வானிலை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக நாட்டின் 12 மாவட்டங்களில் 2,609 குடும்பங்களைச் சேர்ந்த 10,553 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும், 387 வீடுகள் பகுதியளவு சேதமடைந்துள்ளதுடன், 02 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

இதேவேளை, 36 குடும்பங்களைச் சேர்ந்த 152 பேர் 07

# வெலிகம பிரதேச சபை அலுவலகத்துக்குள் சூடு

## சபையின் தவிசாளர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 23

**வெலிகம பிரதேச சபை அலுவலகத்தில் நேற்று காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் வெலிகம பிரதேச சபையின் தலைவருமான லசந்த விக்ரமசேகர உயிரிழந்தார்.**



வெலிகம பிரதேச சபை அலுவலகத்தில் வைத்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்தியவர்கள், தவிசாளரிடம் கையொப்பம் பெற வந்ததாகக் கூறி, பிரதேச சபை வளாகத்திற்குள் பிரவேசித்துள்ளமை தெரியவந்துள்ளது.

பிரதேச சபைத் தவிசாளர் லசந்த விக்ரமசேகர நாற்காலியில் அமர்ந்திருந்தபோது, மோட்டார் சைக்கிளில் பிரவேசித்த 07

## கொழும்பிலிருந்து மன்னார் வந்த சொகுசு பஸ் அதிகாலை விபத்து!

### ஒருவர் உயிரிழப்பு; 10 பேர் காயம்



வவுனியா, ஒக். 23

கொழும்பிலிருந்து மன்னார் நோக்கி பயணித்த தனியார் சொகுசு பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து மன்னார்-மதவாச்சி பிரதான 07

## மக்கள் பிரதிநிதி சுட்டு கொலை; இதுதான் தேசிய பாதுகாப்பா?

### சபையில் சஜித் பிரேமதாஸ கேள்வி

கொழும்பு, ஒக். 23

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் அலுவலகத்தில் இருக்கும் போதே அவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். தேசியப் பாதுகாப்பு இதுதானா? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று சபையில் கேள்வி எழுப்பினார்.

வெலிகம பிரதேச சபையின் தவிசாளர் லசந்த விக்ரமசேகர அலுவலகத்தில் பொது மக்கள் தின நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் வேளையில், அவர் மீது துப்பாக்கி சூடு நடந்தப்பட்டுள்ளது. தனது கடமை களைச் செய்து கொண்டிருந்தபோது நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டில் பலத்த 07

## நிமோனியா காய்ச்சலால் இளம் குடும்பஸ்தர் மரணம்

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 23

ஒரு நாள் காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கைதடி மத்தி, கைதடியைச் சேர்ந்த சிவபாலசிங்கம் காந்தரூபன் (வயது 42) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று முன்தினம் தனது தாயாரின் வீட்டில் இருந்தவேளை திடீரென காய்ச்சலும் 07

## பிறந்து 13 நாள்களேயான ஆண் குழந்தை உயரிழப்பு!

### அல்வாய் வடக்கில் துயரம்

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 23

பிறந்து 13 நாட்களேயான ஆண் குழந்தை ஒன்று யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் பரிதாபமாக உயிரிழந்துள்ளது. அல்வாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த பரந்தாமன் - நிருஜா என்ற தம்பதியரின் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த குழந்தை கடந்த 9ஆம் திகதி மந்திகை 07

## மணற்காட்டில் 300 ஏக்கர் காணி அபகரிப்பு மக்களால் முறியடிப்பு

- பு. கஜிந்தன் -

வடமராட்சி, ஒக். 23

வடமராட்சி கிழக்கு மணற்காடு கிராமத்தில் 300 ஏக்கர் காணி அபகரிப்பு முயற்சி நேற்று மணல்காடு மக்களால் முறியடிக்கப்பட்டது. 07

நேற்று முற்பகல் 11 மணியளவில் வாகனம்



## போதைப்பொருள் கடத்தலின் பின்னணியில் உயரதிகாரிகள்

கொழும்பு, ஒக். 23

போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட நடவடிக்கைகளில் முன்னாள் போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் உயர் அதிகாரிகள் ஈடுபட்டதாக எழுந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.) விசாரணையை ஆரம்பித்துள்ளது. 07

## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் நாவாந்துறையில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணத்தில் நேற்று மின்சாரம் தாக்கி ஆணொருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - நாவாந்துறை பகுதியைச் சேர்ந்த புவனேந்திரன் தேவபாலன் (வயது 47) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு பிறப்பிலேயே கை, கால்கள் செயற்பாடுகள் அற்று காணப்பட்டன. நேற்று 07

## போதை மாத்திரைகளுடன் யாழில் நேற்று இருவர் கைது

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணத்தில் நேற்று போதை மாத்திரை வியாபாரி ஒருவரும் சந்தேக நபர் ஒருவருமென இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிடமிருந்து 110 போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டன.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் 07

## குறிகாட்டுவான் இறங்குத்துறையை புனரமைக்க அமைச்சரவை அனுமதி

யாழ்ப்பாணம், ஒக். 23

புங்குடுதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறையை புனர்நிர்மாணம் செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

நயினாதீவு, நெடுந்தீவு ஆகிய தீவுகளுக்கு செல்லக்கூடிய பிரதான இறங்குத்துறையான குறிகாட்டுவான் இறங்குதுறை செயல்படுகிறது.

எனினும், மிக நீண்டகாலமாக இந்த இறங்குத்துறை புனர்நிர்மாணம் செய்யப்படவில்லை. 07

## தமிழகத்தை கடக்கும் காற்றழுத்தம்

கொழும்பு, ஒக். 23

இலங்கையின் வடக்கு கடற்கரையிலிருந்து குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி வடமேற்கு நோக்கி நகர்ந்து 07

## மூச்செடுப்பதற்கு சிரமப்பட்ட சிறுமி பரிதாபமாக மரணம்

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணத்தில் மூச்செடுக்க சிரமப்பட்ட சிறுமி ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - குருநகர் பகுதியைச் சேர்ந்த நவயோகன் ரிஹானா (வயது - 07) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த சிறுமி நேற்று முன் தினம் மாலை சுவாசிப் பதற்கு சிரமப்பட்டதால் யாழ். 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகை-காங்கேசன் பயணிகள் கப்பல் போக்குவரத்து நவம்பர் நிறுத்தப்படும்

கொழும்பு, ஒக். 23

பருவநிலை மாற்றம் காரணமாக நாகை - காங்கேசன்துறை இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து நவம்பர் மாதம் நிறுத்தப்படும். மேலும் டிசெம்பர், ஜனவரி மாதங்களில் வழக்கம்போல் சிவகங்கை கப்பல் இயக்கப்படுமென்று சுபம் கப்பல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுந்தர்ராஜன் தெரிவித்தார்.

இது குறித்து சுபம் கப்பல் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுந்தர்ராஜன் கூறுகையில்-

சுபம் கப்பல் நிறுவனம் நாகை துறைமுகம் இலங்கையின் காங்கேசன்துறைக்கு இடையே சிவகங்கை பயணிகள் கப்பலை இயக்கி வருகிறது.

இந்தக் கப்பலில் கடந்த ஓராண்டில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்துள்ளனர்.

நாளுக்குநாள் பயணிகளின் வருகை அதிகரித்து வருகிறது. புதிய கப்பல் போக்குவரத்து விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதற்காக புதிய கப்பல் சீனாவில் இருந்து புறப்பட்டுள்ளது. அந்தக் கப்பல் நவம்பர் மாதம் இறுதிக்குள் நாகை வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு பருவமழை சில நாள்களில் தொடங்கவுள்ளதால், பருவநிலை மாற்றம் ஏற்படும். இதனால், கடல் சீற்றம் மற்றும் சூறைக்காற்று காரணமாக கப்பல் இயக்குவதில் சிக்கல் உள்ளது. ஆகவே நவம்பர் மாதம் முழுவதும் சிவகங்கை பயணிகள் கப்பல் இயக்கப்படாது.

கடந்த 30 ஆண்டுகளின் காலநிலை தகவல்களை அடிப்படையாகக் கொண்டு, நிகழாண்டு நவம்பர் மாதத்தை தவிர்த்து, டிசெம்பர், ஜனவரி மாதங்களில் வழக்கம்போல் சிவகங்கை கப்பல் இயக்கப்படும் - என்றார். (அ)

# மேலதிக சுங்க பணிப்பாளர் நாயகமாக தர்மலிங்கம் லோகநாதன் பதவி உயர்வு




யாழ்ப்பாணம், ஒக். 23

மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகமாக காரைநகர் களபூமியை சேர்ந்த தர்மலிங்கம் லோகநாதன் பதவி உயர்வு பெற்றுள்ளார். சுங்க சேவையில் பதவி வழி உத்தியோகத்தர் அடையக்கூடிய ஆகக்கூடிய பதவி இது என்பது குறிப்பிடத்தக்கது.

1992 ஆம் ஆண்டு நடந்த போட்டி பரீட்சையில் தெரிவாகி, 1993 ஆம் ஆண்டு உதவி சுங்க அத்தியட்சராக நியமனம் பெற்ற லோகநாதன், 2016 ஆம் ஆண்டு சுங்க அத்தியட்சராகவும் 2024 ஆம் ஆண்டு சுங்கப் பணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றார்.

இவர், 1991 ஆம் ஆண்டு விஞ்ஞானமானி பட்டத்தை யாழ்.பல்கலைக்கழகத்திலும் 2009 ஆம் ஆண்டு முதுகலைமானி பட்டத்தை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்திலும் பெற்றார்.

இவர் சுங்கத்திணைக்கள இந்து ஊழியர் சங்கத்தின் தலைவரும் சுங்க மேற்பார்வை உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவரும் ஆவார். (அ)




கந்தசஷ்டி விரதம் நேற்று ஆரம்பமானது. இதையொட்டி பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று முருக பெருமான் உள்வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருட்காட்சியளித்தார்.

# வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் உணவு அறை நேற்று திறந்து வைப்பு!



யாழ்ப்பாணம், ஒக். 23

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் உணவு அறை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் பொலிஸ் நிலையங்களுக்கு ஒதுக்கப்பட்ட விசேட நிதியிலேயே இந்த உணவு அறை திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வின் ஆரம்பத்தில், விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து நாடா வெட்டி உணவு அறை திறந்து வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவருக்கும் மதிய உணவு பரிமாறப்பட்டது.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கொஸ்தா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எஸ். ஜயமால், பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (அ-05)

# கிளிநொச்சியில் வாகனங்கள் குறித்து விசேட பரிசோதனை நடவடிக்கைகள்

கிளிநொச்சி, ஒக். 23

கிளிநொச்சி மாவட்டத்தில் வாகனங்கள் குறித்த விசேட பரிசோதனை நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பொலிஸார், மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பரிசோதகர் ஆகியோர் இணைந்து சேர்ந்து பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது வாகனங்களின் நிலைமை தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டது.

வாகனங்கள் வீதியில் பயணிப்பதற்கான தகுதி நிலையுடன் பயணிக்கின்றதா என்பது தொடர்பாக முழு அவதானம் செலுத்தி பரிசோதனை நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

# ஒரேநாளில் 6 சிறுவர் துஷ்பிரயோகங்கள்

கொழும்பு, ஒக். 23

நாட்டில் கடந்த திங்கட்கிழமை மாத்திரம் ஆறு சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்த சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களில் 5 சம்பவங்கள் காதல் உறவுகளினால் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் ஆனமடுவ, தெபுவன, கண்டி கம்பளை , களுத்துறை பயாகலை , அம்பாறை தமன ஆகிய பிரதேசங்களில் இருந்து இந்த சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

12,14,15 மற்றும் 17 வயதுடைய சிறுமிகளே இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளனர். (அ)

# அரசடி அம்மனுக்கு இராஜ கோபுரம்

யாழ்ப்பாணம், ஒக். 23

திருநெல்வேலி அரசடி சிறீ சிவகாம சுந்தரி அம்பாள் ஆலய இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று புதன்கிழமை இடம்பெற்றது.

ஆலயத்தில் காலை இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளை தொடர்ந்து அம்பாளுக்கான இராஜ கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் ஆலய தர்மகர்த்தாக்கள், அடியவர்கள் கலந்து இராஜ கோபுரத்துக்கான அடிக்கல்லை நாட்டினர்.

ஆலயத்தில் பாலஸ்தானம் இடம்பெற்று, ஆலய புனரமைப்பு வேலைகள் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)



# துப்பாக்கிகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஒக். 23

நாட்டில் தயாரிக்கப்பட்ட 2 துப்பாக்கிகள் மற்றும் 2 வலம்புரி சங்குகளுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடி படையினரால் கைது செய்யப்பட்டார்.

அம்பலங்கொடை - விசேட அதிரடி படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் உடகெலாவ, மீட்டியாகொடவை சேர்ந்த 55 வயதுடையவராவார். (அ)

# நிமலராஜனுக்கு அஞ்சலி


யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ்ப்பாணத்தில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 25ஆம் ஆண்டு நினைவு தின நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் அவர்களது கட்சியின் தலைமைச் செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது ஈகச் சுடர் ஏற்றப்பட்டு, அன்னாரின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நினைவேந்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் மற்றும் கட்சியின் செயல்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். (அ-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.10.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஐப்பசி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இது நாட்டுக்கு தேவையானதா?

பௌத்த சாசனத்துக்கு தனியான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு தேவையென்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார். அத்துடன், அரசமைப்பின் பிரகாரம் பௌத்த சாசனத்தைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை என்றும் சஜித் தெரிவித்திருக்கிறார். பதின்மூன்றாவது திருத்தச் சட்டமும் அரசமைப்பில்தான் இருக்கிறது. அதனை முழுமையாக அமுல்படுத்தவேண்டியதும் அரசாங்கத்தின் கடமைதான் என்பது தொடர்பில் ஏன் சஜித் பிரேமதாஸவால் வலியுறுத்த முடியாமல் இருக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்குமாறு ஒரு தரப்பினரும் இன்னொரு தரப்பினர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்குமாறும் கோரியிருந்தனர். ஆனால், சஜித் பிரேமதாஸவோ ஒருபுறம் தமிழ் மக்களின் ஆதரவைக் கோரிக்கொண்டு, இன்னொரு புறம் தன்னையொரு பௌத்த – சிங்கள தேசியவாதியாக அடையாளப்படுத்துவதில்தான் மிகவும் கவனமாக இருக்கிறார் என்பது தெளிவானது. ஒப்பீட்டளவில் ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது அநுர குமார திஸநாயக்கவோ இவ்வாறான நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், சஜித் பிரேதாஸவோ தன்னை சிங்கள- பௌத்த தேசியவாதியாக அடையாளப்படுத்துவதில் ஏனையவர்கள் எவரைவிடவும் தீவிரமாக இருக்கிறார்.

தென்னிலங்கை அரசியலில் பௌத்தத்தின் செல்வாக்குத்தான் இலங்கைத் தீவின் தேசிய இனப்பிரச்னைக்கான அடிப்படையான காரணமாகும். இன்றுவரையில் பிரச்னை தீர்வின்றி தொடர்வதற்கும் அடிப்படையான காரணம் இதுதான். ஆனால், தங்களுடைய அரசியல் சீவியத்திற்காக அனைவருமே தங்களைப் பௌத்தத்தின் காவலர்களாகக் காண்பிப்பதிலேயே கரிசனை கொண்டிருக்கின்றனர். இன்னொருபுறம் இதுதான் இலங்கையின் பிரச்னையுமாகும்.

ஆளும் கட்சிக்கு அழுத்தங்களைப் பிரயோகித்து, நாட்டை முன்னோக்கி நகர்த்தவேண்டியதுதான் ஒரு சரியான எதிர்க்கட்சியின் பணியாக இருக்கவேண்டும். ஆனால், இலங்கையில் எதிர்க்கட்சிகளின் வரலாறு வேறுவிதமானது. ஆளும் கட்சியை சரியான வழிக்குக் கொண்டுசெல்ல முற்படாமல், எதையும் செய்யமுடியாதளவுக்கு நெருக்கடிகளைக் கொடுப்பதிலேயே இலங்கையின் எதிர்க்கட்சிகள் தொழில்படுவதுண்டு.

பௌத்த மதத்துக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள தனியான அமைச்சு அவசியமென்று சஜித் பிரேமதாஸ இப்போது கூறுவதானது, தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுக்கும் நோக்கம் கொண்டதேயன்றி, அவர்களை நல்லவழியில் நகர்த்தும் நோக்கம் கொண்டதல்ல. சஜித் பிரேமதாஸ பௌத்த மதத்தை உயர்த்திப் பிடிக்கும்போது அதனைக் கையாளும் வகையில், அதற்கு பதிலாகத் தாங்களும் சில விடயங்களை மேற்கொள்ளவேண்டும் என்னும் நிலைப்பாட்டுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் வரநேரிடும்.

தேசிய மக்கள் சக்தி ஒப்பீட்டளவில் பௌத்த மதத்தை உயர்த்திப் பிடிக்கவோ அல்லது இனவாத அரசியலை உயர்த்திப் பிடிக்கவோ முற்படவில்லை. ஆனால், தமிழ் மக்களை நோக்கி நேரடியாகச் செல்லும் செயல்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர். இதனால் அச்சமடையும் தமிழ் கட்சிகளும் சிவில் சமூகக் குழுக்கள் என்போரும் தேசிய மக்கள் சக்தியை இனவாத அமைப்பாகக் காண்பிப்பதில் ஆர்வம் காண்பித்தாலும்கூட, அவர்கள் ஒப்பீட்டளவில் அவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுத்தமைக்கு இதுவரையில் சான்றில்லை. எதிர்காலம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால், சஜித் பிரேமதாஸ இவ்வாறான பிரசாரங்களை முன்னெடுத்தால், தேசிய மக்கள் சக்தி சில நிலைப்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறது.

# தென்கொரிய தூதுவருடன் பிரதமர் சந்திப்பு



கொழும்பு, ஒக். 23

பிரதமர ஹரிணி அமர சூரிய மற்றும் இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் மியோன் லீ ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பு நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பிலும், இலங்கையின் கல்வி சீர்திருத்தங்கள் மற்றும் கல்வித் துறையின் டிஜிற்றல் மயமாக்கலை மேம்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன், குளியாப்பிட்டியில் அமைக்கப்படவுள்ள புதிய தொழில்நுட்ப தேசிய கல்வியியல் கல்லூரியை அபிவிருத்தி செய்தல் தொடர்பிலும் தொழிற்கல்வி தொடர்பான பாடங்களை தேசிய பாடத் திட்டத்தில் ஒருங்கிணைத்தல் தொடர்பிலும் தொழில்சார் துறைகளைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு விசேட ஆசிரியர் பயிற்சிகளை வழங்குதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, தென்கொரிய அரசு இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ந்தும் பங்களிப்பு வழங்கும் என இலங்கைக்கான தென்கொரிய தூதுவர் மியோன் லீ தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையின் கல்வித் துறையை விரிவுபடுத்துவதற்கு தென்கொரிய அரசு ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தென்கொரிய தூதுவர் இந்த சந்திப்பின்போது கூறினார்.

அத்தோடு குறிப்பாக, கல்வித் துறையை பெரும்பாலான மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் விரிவாக்குவதில் அந்நாடு கொண்டிருக்கும் ஆர்வத்தையும் அவர் வெளிப்படுத்தினார்.

இச்சந்திப்பில் இரு தரப்பினதும் சிரேஷ்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர். (அ)

# சீரற்ற காலநிலையால் இதுவரை பாரதூரமான இடர்கள் இல்லை!

## பாதுகாப்பு பிரதி அமைச்சர்

கொழும்பு, ஒக். 23

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலைக்கு மத்தியில் பாரதூரமான அனர்த்தங்கள் ஏதும் இது வரையில் பதிவாகவில்லை. அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு முப்படையினரும் தயாராகவே உள்ளனர். சகல அமைச்சுகள் ஊடாகவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற அமர்வின்போது நாட்டில் நிலவும் மழையுடனான நிலைமை தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலையால் குருநாகல், அனுராதபுரம், காலி, கேகாலை, பதுளை, கண்டி, புத்தளம், கொழும்பு, நுவரெலியா, வவுனியா, மொனராகலை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 9500 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த மாவட்டங்களில் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு 67 பிரதேச செயலர் பிரிவுகள் ஊடாக நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. கடுமையான மழை வீழ்ச்சி மற்றும் மண்சரிவினால் அநுராதபுரம், கேகாலை மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மூவர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காணாமல்போயுள்ளார்.

மழை மற்றும் கடும் காற்று, மண்சரிவு ஆகியவற்றால் 311 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் 24 மணித்தியாலமும் சேவையில் உள்ளது. நாட்டில் நிலவும் மழையுடனான காலநிலைக்கு மத்தியில் பாரதூரமான அனர்த்தங்கள் ஏதும் இது வரையில் பதிவாகவில்லை. அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கு முப்படையினரும் தயாராகவே உள்ளனர். சகல அமைச்சுகள் ஊடாகவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன- என்றார்.

(அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ஆடை ஆபரணம் சேரும். பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் வரவு உயரும். உயரதிகாரிகள் அதிசயிக்கும் படி நடந்துக் கொள்வீர்கள்.

**மிதுனம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். நட்பால் ஆதாயம் உண்டு. வாகன வசதி பெருகும். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். கனவு நனவாகும் நாள்.

**கடகம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
அரசால் ஆதாயம் உண்டு. துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை விற்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் உடனே முடியும். உடல் நலம் சீராகும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புதியவர்களை நம்பி ஏமாற வேண்டாம். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும்.

**விருச்சிகம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். பிள்ளைகளின் பிடிவாதத்தை அனுசரணையான பேச்சால் சரி செய்யுங்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். கவனம் தேவைப்படும்.

**தனுசு**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும் எதிர்பாராத சந்திப்பு நிகழும். வாகனம் பழுதாகும். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**மகரம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. சாதித்துக் காட்டும் நாள்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்தபிணக்குகள் நீங்கும். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். உடனே உணர்ச்சிவசப்பட்டு கத்தாதீர்கள். வியாபாரத்தில் சரக்குகளை போராடி விற்பீர்கள். வேலைச்சுமை மிகுந்த நாள்.

# தவறான விடயத்தை செய்து வருவோர் அதை மாற்றுவதற்கு பின்னடிக்கின்றனர்

## வடக்கு மாகாண ஆளுநர் கருத்து



யாழ்ப்பாணம், ஒக். 23

"தவறான விடயத்தை செய்து வந்தால் அதைத் தொடர்வதற்கே விரும்புகின்றனர். அதை மாற்றுவதற்கு பின்னடிக்கின்றனர். மாற்றத்தை எல்லோரும் ஒன்றிணைந்தாலே ஏற்படுத்த முடியும். "

-இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர்கள், செயலாளர்கள் ஆகியோருக்கான பயிற்சி வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை வடக்கு மாகாண ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கு கருத்துத் தெரிவித்த ஆளுநர், காலத்துக்கு ஏற்ப மாற்றங்களை நாம் ஏற்படுத்தவேண்டும். எங்கள் சேவைகளை விரிவாக்குவதுடன் அவற்றை விரைவுபடுத்தவும் வேண்டும்.

தவிசாளர்கள் மற்றும் செயலாளர்கள் சிலர் துணிவுடன் நடவடிக்கைகள் எடுக்கின்றீர்கள். அதைப் பாராட்டுகின்றேன். ஏனையோரும் அவ்வாறு செயற்படவேண்டும். தவிசாளர்களும், செயலாளர்களும் இணைந்து செயற்படவேண்டும். இருவரும் முரண்பட்டால் அதைத் தீர்பதே எங்களுக்குப் பெரும் தலையிடியாக மாறிவிடும். தவிசாளர்களுக்கும் செயலாளர்களுக்கும் இடையிலான முரண்பாட்டால் பாதிக்கப்படப்போவது அந்தப் பகுதி மக்களே. அந்த மக்களுக்கு சேவை செய்வதற்கே எல்லோருக்கும் இருக்கின்றார்கள். அதை மனதிலிருத்தினாலே போதும். மக்களை அவர்களது சேவைகளை நிறைவேற்றுவதற்கு அலைக்கழிக்காதீர்கள்.

இதேநேரம், யாழ். மாநகர சபை எல்லைக்குள் உள்ள பெரு வணிக நிறுவனங்கள் குடிபுகு சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளாமல் இயங்குகின்றன. இதனால் அவர்கள் மாநகர சபைக்குச் செலுத்தும் வரியானது, பிரதேச சபையொன்றிலுள்ள குடியிருப்பாளர் செலுத்தும் வரியை விடக் குறைவானது. இதைத் தொடர்ந்து அனுமதிக்க முடியாது. அதற்கெதிராக நடவடிக்கை எடுக்கவேண்டியது உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பு. அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதன் ஊடாக மாற்றங்களை ஏற்படுத்துவோம்-என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், பிரதிப் பிரதம செயலாளர் - ஆளணியும் பயிற்சியும் செ. பிரணவநாதன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.சுதர்சன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் வடக்கு மாகாணப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

# சைவப்புலவர் சு.செல்லத்துரை சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியவை!

## ஆளுநர் நா.வேதநாயகன் பாராட்டு

யாழ்ப்பாணம், ஒக். 23

சைவப்புலவர் சு.செல்லத்துரை சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய பணிகள் அளப்பரியது. அதற்கும் அப்பால் அவரது பண்புகள் மெச்சத்தக்கன. அதனால் தான் அவர் அமரராகிய பின்பும் எல்லோராலும் நினைவுகூரப்படுகின்றார். இத்தகையோரின் வாழ்வை இன்றைய இளையோருக்கும், அதிகாரிகளுக்கும் சொல்லிக்கொடுக்கவேண்டியிருக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

சைவப்புலவர் சு.செல்லத்துரை அறக்கட்டளை நிதியத்தின் ஏற்பாட்டில் அவரது நான்காவது ஆண்டு நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை அறக்கட்டளை நிதியத்தின் தலைவர் த.தயானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர், சமூகத்துக்குச் சேவை செய்தவர்கள் அவர்கள் மறைந்த பின்னரும் அந்தச் சமூகத்தால் மதிப்பளிக் கப்படுவார்கள். அதற்கு சைவப்புலவர் சு. செல்லத்துரை மிகச் சிறந்த உதாரணம்.

இன்று சிலர் உயர் பதவிகளிலிருந்தாலும் அவர்கள் சமூகத்தால் கொண்டாடப்படுவதில்லை. அந்த உயர் பதவிகளிலிருப்பவர்கள் சமூகத்திலிருப்பவர்களை மதிப்பதில்லை. அவர்களுக்கு உதவுவதற்கு விரும்புவதில்லை. தம்மைப் பெரியவர்கள் என்று கருதி சமூகத்திலிருப்பவர்களை உதாசீனப்படுத்துவார்கள். அவர்கள் எப்போதும் சமூகத்தால் நினைவில் வைத்துக் கொள் ளப்படமாட்டார்கள்.

ஆனால் சைவப்புலவர் சு. செல்லத்துரை, வயதில் மூத்தவராக இருந்தாலும் இளையோருக்கும் மதிப்பு வழங்கி கலந்துரையாடும் ஒருவராகவே இருந்தார். இன்றைய அதிகாரிகளுக்கு இதைச் சொல்லிக் கொடுக்க வேண்டி யிருக்கின்றது. அதிகாரிகள் தங்களை நாடி வருகின்ற பொதுமக்களை அவ்வாறு மதிப்பு வழங்கி கலந்துரையாடுவது குறைவாகவே இருக்கின்றது. பல பொதுமக்கள் இது தொடர்பில் எனக்கு தங்கள் கவலைகளைத் தெரிவித்திருக்கின்றனர். அதிகாரிகள் தங்களைப் பெரியவர்களாகக் காட்டிக் கொள்வதற்காக, சந்திக்க வரும் பொதுமக்களை காக்க வைப்பது, அலைக்கழிப்பது போன்ற செயல்களில் ஈடுபடுவதும் கவலைக்குரியது.

நாம் சைவப்புலவர் சு. செல்லத்துரை போன்றவர்களை நினைவுகூர்வதன் ஊடாக அவர்களின் பண்புகளை எடுத்துச் சொல்லவேண்டும்-என்றார் ஆளுநர்.

# வடக்கின் உள்ளூராட்சி ஆணையாளராக சாம்பசிவம் சுதர்சன் ஆளுநரால் நியமனம்

யாழ்ப்பாணம், ஒக். 23

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக சாம்பசிவம் சுதர்சன் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் வைத்து ஆளுநர் நேற்று புதன்கிழமை காலை வழங்கினார்.

இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துகொண்டார். (அ)

# தமிழ் அரசு காங்கேசன்துறை தொகுதி கிளை தெரிவு

யாழ்ப்பாணம், ஒக். 23

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறை தொகுதிக்கிளை தெரிவு நேற்று முன்தினம் மாலை 5.00 மணியளவில் மாவிட்டபுரத்தில் இடம்பெற்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானம் மற்றும் பதில் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற புதிய நிர்வாகத் தெரிவில் காங்கேசன்துறை தொகுதிக் கிளையின் தலைவராக வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தனும், உப தலைவராக வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் தங்கராசாவும், செயலாளராக வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் விஜயராஜும், உப செயலாளராக முன்னாள் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் மரியதாஸும், பொருளாளராக வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் உதயசங்கரும் தெரிவானர்.

இத்தோடு 21 வட்டாரங்களைக் கொண்ட வலி வடக்கில் நிர்வாக முக்கிய.பொறுப்புக்களில் தெரிவு செய்யப்பட்டவர்களின் வட்டாரம் தவிர்ந்த ஏனைய வட்டாரங்களுக்கு பொறுப்பாக ஒவ்வொருவர் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபை தேர்தலை முடிந்தால் நடத்திக்காட்டுக!

**அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி சவால்**

கொழும்பு, ஒக். 23

**முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

"உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் அரசாங்கத்தின் வாக்கு வங்கி 23 இலட்சத்தால் குறைவடைந்தது.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால் இந்நிலைமை மேலும் மோசமாகும். மீண்டும் 3 சதவீதத்துக்கு இறங்கிவிடுவோம் என அரசாங்கம் அஞ்சுகின்றது. முடிந்தால் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்துக்கு சவால் விடுக்கின்றோம்." எனவும் அவர் கூறினார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பன இணைந்து செயற்படுவதற்கு ஆதரவாளர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர் எனவும் ஐக்கிய மக்கள் சக்தி பொதுச்செயலாளர் குறிப்பிட்டார். (அ)



## குறைகிறது தங்கத்தின் விலை

கொழும்பு, ஒக். 23

இலங்கையில் நேற்று தங்கத்தின் விலை 20,200 ரூபாய் குறைந்துள்ளது.

செட்டியார் தெரு தங்கச் சந்தை தரவுகளின்படி, நேற்று முன் தினம் 342,200 ரூபாவாக இருந்த 22 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலைநேற்று 322,000 ரூபாவாக குறைந்துள்ளது.

அதேநேரம் நேற்று முன் தினம் 370,000 ரூபாவாக காணப்பட்ட 24 கரட் ஒரு பவுண் தங்கத்தின் விலை நேற்று 350,000 ரூபாவாக குறைந்துள்ளது.

கடந்த சில நாட்களாக 410,000 ரூபாய் வரை அதிகரித்த தங்கத்தின் விலை தற்போது படிப்படியாக குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கால்வாயில் கவிழ்ந்த கார்

கொழும்பு, ஒக். 23

பாணந்துறை - கர்மாந்தபுர வீதியில் காரொன்று வழுக்கிச் சென்று கெரபன் கால்வாயில் கவிழ்ந்துள்ளது.

அதிர்ஷ்டவசமாக காரில் பயணித்த இரண்டு பேருக்கும் எவ்வித காயமும் ஏற்படவில்லை.

குறித்த பிரதேசவாசிகளால் கயிறுகளின் உதவியுடன் கார் மீட்கப்பட்டுள்ளது.

முன்னால் வாகனமொன்று வந்த நிலையில் காரின் சாரதி பிரேக்கை மிதித்துள்ளார். ஆனால், மழை காரணமாக வீதி வழுக்கும் தன்மையுடன் இருந்தமையால் கார் வீதியை விட்டு விலகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

## 87 அதிகாரிகளின் பாதுகாப்பில் ஹரக் கட்டா தடுத்து வைப்பு!

கொழும்பு, ஒக். 23

பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஹரக் கட்டா என்றழைக்கப்படும் நந்துன் சிந்தக என்பவரின் பாதுகாப்புக்காக சுமார் 87 அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று ஹரக் கட்டாவின் சட்டத்தரணி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

ஹரக் கட்டாவின் சட்டத்தரணி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பிய கடிதத்திலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், ஹரக் கட்டா 2 ஆண்டுகளுக்கும் அதிக காலமாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அதிக காலமாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டவர் ஹரக் கட்டா தான் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

ஈஸ்டர் தினத் தாக்குதல்

## புலனாய்வு அதிகாரி கைதாவதை தடுக்கும் இடைக்கால தடை நீடிப்பு

கொழும்பு, ஒக். 23

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் தொடர்பாக முன்னாள் இராணுவப் புலனாய்வு அதிகாரி கே.எஸ்.மத்துமகேவை சட்டமா அதிபரின் ஆலோசனையின்றிக் கைது செய்வதைத் தடுக்க பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடையுத்தரவை நவம்பர் 11 ஆம் திகதி வரை நீடித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டது.

இராணுவ கேணல் தாக்கல் செய்த ரிட் மனுவை மறுபரிசீலனை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் நீதியரசர் ரோஹந்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய குழுவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத், நீதிமன்றத்தில் சாட்சியங்களை சமர்ப்பித்து, மனுதாரரைக் கைது செய்வதைத் தடுத்து ஒருதலைப்பட்சமாக பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நிறுத்தி வைக்குமாறு கோரினார்.

இது தொடர்பாக வரைவுக்கப்பட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்துள்ளதாகவும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

மனுதாரரான இராணுவ அதிகாரி சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, தனது கட்சிக்காரர் 29 ஆண்டுகள் இராணுவ சேவையைக் கொண்ட அனுபவம் வாய்ந்த அதிகாரி என்றும் அவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் திறமையான உறுப்பினர் என்றும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் தற்போது தியத்தலாவை இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றி வருவதாகக் கூறிய ஜனாதிபதி சட்டத்தரணி, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக நடத்தப்படும் விசாரணைகள் தொடர்பாக அவரைக் கைது செய்வதற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றும் சுட்டிக்காட்டினார். (அ)

## கொழும்பு மகாநாம கல்லூரியில் மூன்று சிறார்கள் துஷ்பிரயோகம்

**சபையில் சஜித் பிரேமதாஸ தகவல்**

கொழும்பு, ஒக். 23

கொழும்பு மகாநாம கல்லூரியில் கற்கும் மூன்று பிள்ளைகளை குறித்த பாடசாலைக்கு பொறுப்பான தலைமைப் பாதுகாப்பு அதிகாரியால் ஒக்ரோபர் 4 ஆம் திகதி சனிக்கிழமை கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றன. துஷ்பிரயோகம் செய்யப்பட்ட பிள்ளைகள் குறித்து அதிபரோ அல்லது ஆசிரியர்களோ எந்தத் தெளிவான தொரு நடவடிக்கைகளையும் இதுவரை எடுக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இரு ஆசிரியர்கள் இது தொடர்பில் அதிபரோடு பேசும் போது அதிபர் குறித்த இரு ஆசிரியர்களையும் மிரட்டியுள்ளார். இது குறித்து முறைப்பாடு பதிவு செய்ய முற்படும்போது, நீதிமன்றங்கள்தோறும் அழைத்துச் செல்ல வேண்டி வரும் என்றும், பல ஆண்டுகளாக வழக்குகள் இழுத்தடிக்கப்படலாம் என்றும் பெற்றோர்களை பயமுறுத்தியுள்ளார். பாடசாலை முன்பாக போராட்டமொன்றை முன்னெடுப்பதற்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் குறித்து முறையான விசாரணையை நடத்தி, குறித்த பிள்ளைகளுக்கு பாதுகாப்பை பெற்றுக் கொடுக்குமாறும், இந்த விடயம் குறித்து ஆராய்ந்து பார்க்குமாறும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இந்தக் குற்றவாளி மீது சட்டரீதியிலான நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த செல்வாக்குக்கும் அடிபணியாமல் விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (அ)

## ஹரினுக்கு முக்கிய பதவி!

கொழும்பு, ஒக். 23

உடன் அமுலாகும் வகையில் முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவை ஐக்கிய தேசிய கட்சி அரசியல் அணி திரட்டலுக்கான பிரதிச் செயலாளராக நியமித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு வழங்கப்பட்ட பதவியின் பொறுப்பு, நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து, அவற்றை ஒரு பொதுவான நிகழ்ச்சி நிரலில் ஈடுபடுத்துவதாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக, ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்யும் 1,000 கூட்டங்களுக்கும் ஹரின் பெர்னாண்டோவே பொறுப்பேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

## முதன்மைப் பணவீக்கம் 2.1 வீதமாக உயர்வடைவு

கொழும்பு, ஒக். 23

தேசிய நுகர்வோர் விலை சுட்டெண் அடிப்படையிலான முதன்மை பணவீக்கம் கடந்த செப்ரெம்பர் மாதத்தில் 2.1 வீதமாக உயர்வடைந்துள்ளது.

இது, கடந்த ஒகஸ்ட் மாதத்தில் 1.5 சதவீதமாகக் காணப்பட்டது என மக்கள் தொகை கணக்கெடுப்பு, புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த திணைக்களம் நேற்று முன் தினம் வெளியிட்ட அறிக்கையின்படி, ஒகஸ்டில் 2.9 வீதமாக இருந்த உணவு வகையின் முதன்மை பணவீக்கம் செப்ரெம்பரில் 3.8 வீதமாக அதிகரித்துள்ளது.

இதேபோன்று, ஒகஸ்டில் 0.4 வீதமாக இருந்த உணவு அல்லாத வகையின் முதன்மை பணவீக்கம், செப்ரெம்பரில் மாதத்தில் 0.7 வீதமாக அதிகரித்துள்ளது.

இந்தத் தரவுகள் நாட்டின் பொருளாதார நிலைமை மற்றும் மக்களின் வாங்கும் திறன்மீதான அழுத்தத்தை வெளிப்படுத்துகிறது என்று பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

## பேராதனை வழங்கிய பதக்கத்தை இரத்து செய்தது உயர் நீதிமன்றம்!

கொழும்பு, ஒக். 23

2015 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தில் சிறந்த மாணவருக்கு வழங்கப்படும் பேராசிரியர் ஈ.ஓ.ஈ. பெரேரா தங்கப் பதக்கத்தை, பல்கலைக்கழகத்தின் மின் துறையின் பயிற்றுவிப்பாளர் ஏ.எச்.ஏ.டி. அபேசேகரவுக்கு வழங்க பேராதனைப் பல்கலைக்கழக நிர்வாகம் எடுத்த முடிவை உயர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

பல்கலைக்கழகத்தின் பொறியியல் பட்டதாரி ஒருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை விசாரித்த பின்னர், நீதிபதிகள் சோபித ராஜகருணா மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோரின் ஒப்புதலுடன், உயர் நீதிமன்ற நீதிபதி ஜனக் டி சில்வா இந்த முடிவை அறிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த தங்கப் பதக்கங்களை வழங்குவதற்கான வெளிப்படையான மதிப்பெண்களை வழங்குவதற்கான முறையான அமைப்பை உருவாக்க சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்திற்கு நீதிபதிகள் குழு உத்தரவிட்டது.

2016 மார்ச் 9, அன்று தொடர்புடைய தங்கப் பதக்கத்துக்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்ததாகவும், மதிப்பெண் முறை மாறிவிட்டதாக நிர்வாகம் அறிவித்த பின்னர் மீண்டும் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்ததாகவும் மனுதாரர் கூறுகிறார்.

இருப்பினும், பல்கலைக்கழக நிர்வாகம் சம்பந்தப்பட்ட தங்கப் பதக்கத்தை பல்கலைக்கழகத்தின் மின் துறையின் பயிற்றுவிப்பாளர் ஏ.எச்.ஏ.டி. அபேசேகரவுக்கு வழங்க முடிவு செய்ததாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிந்துவிட்டதால், மனுதாரருக்கு இந்த தங்கப் பதக்கத்தை வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படாது என்றும் தொடர்புடைய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணியாவில் 30 மாடுகள் வாள்வெட்டுக்கு இலக்காகின!

## மேய்ச்சல் தரை தகராறின் உச்சம்!!

திருமலை, ஒக். 23

கிண்ணியா பிரதேசத்தில் நிலவும் கால்நடை வளர்ப்பாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் இடையேயான நீண்டகால நில மீட்புப் போராட்டத்தின் உச்சக் கட்டமாக, நேற்று முன் தினம் காலை 30 மாடுகள் வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ள அதிர்ச்சி சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா குரங்குபாஞ்சான் இரட்டைக்குளம் பகுதியில் வைத்து நேற்று முன் தினம் காலை இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்கள் இது குறித்து கிண்ணியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

30 மாடுகள் வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளன.

12 மாடுகளின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் நான்கு மாடுகளைக் காணவில்லை எனவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாள் வெட்டுக்கு இலக்கான மாடுகள், கால்நடைகள் பராமரிப்பு நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சை சிகிச்சை அளிக்கப்பட்டது.

சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கிண்ணியா போலீசார் மேற்கொண்டு வருகின்றனர்.

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக, கிண்ணியா பிரதேச கால்நடை விவசாயிகளுக்கும் வேளாண்மை விவசாயிகளுக்கும் இடையிலான நில மீட்புப் போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

நீதிமன்றத் தீர்ப்பு மற்றும்


இந்த நிலையில், 2876 ஹெக்ரேயர் நிலம் மேய்ச்சல் தரைக்கு உரியது என மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த மே மாதம் 28 ஆம் திகதி தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பானது, கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரையின்றிப் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வந்த கிண்ணியா கால்நடை விவசாயிகளுக்கு வாழ்வில் விடிவை ஏற்படுத்தியிருப்பதாக அவர்கள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

எனினும், இத்தீர்ப்பைத் தொடர்ந்து, கிண்ணியா மற்றும் குறிஞ்சாக்கேணி கமநல சேவை நிலையங்களில் பதிவு செய்யப்பட்ட விவசாயிகள், தங்களுக்குரிய விவசாய நிலங்களில் பயிர் செய்வதற்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கித் தொடர்ந்து விவசாயம் செய்ய அனுமதிக்குமாறு கோரி தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க, நீதிமன்றத்தால் அடையாளப்படுத்தப்பட்ட குறித்த பகுதிக்குள் விவசாயிகளை வேளாண்மை செய்ய அனுமதிக்க வேண்டாம் என கமநல சேவை திணைக்களங்களுக்கு கிண்ணியா பிரதேச செயலாளரால் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# தண்ணீர் போத்தலை அதிக விலைக்கு விற்றவருக்கு ரூ. 1 இலட்சம் அபராதம்!

அம்பாறை, ஒக். 23

அரசாங்க கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு குடிதண்ணீர் போத்தல் ஒன்றை விற்பனை செய்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் உள்ள ஒரு வர்த்தக நிலையத்துக்கு பொத்துவில் நீதிவான் நீதிமன்றம் ஒரு இலட்சம் ரூபா ரூபாவை அபராதமாக விதித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையின் அம்பாறை மாவட்ட அலுவலகத்தின் பொறுப்பதிகாரி சாலிந்த நவரத்தனவால் இந்த வழக்கு தாக்கல் மேற்கொள்ளப்பட்டது.

1500 மில்லிலீற்றர் குடிதண்ணீர் போத்தலின் கட்டுப்பாட்டு விலை 130 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த வர்த்தக நிலையம் அதனை 150 ரூபாவிற்கு விற்பனை செய்ததாக குற்றம்சாட்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, குற்றம் சாட்டப்பட்ட வர்த்தக நிலையம் நீதிமன்றத்தின் முன் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டது.

இதனை அடுத்து குறித்த வர்த்தக நிறுவனத்திற்கு நீதிவான் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (அ)

# சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அம்பாறை அமைப்பாளராக ஹக்கானி

அம்பாறை, ஒக். 23



சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்டத்திற்கான இளைஞர் அமைப்பாளராக ஏ.எம்.எஸ் ஹக்கானி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கட்சியின் தவிசாளராக பணியாற்றிய முன் னாள் வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான காலம்சென்ற முழக்கம் ஏ.எல். அப்துல் மஜீதின் புதல்வராவார்.

மருதமுனை பொது நூலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கட்சியின் நிகழ்வொன்றின்போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இவருக்கான நியமனக் கடிதம் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை, கல்முனை மாநகர முன்னாள் பிரதி மேயர் ரஹ்மத் மன்சூர், கட்சியின் உதவிச் செயலாளர் மன்சூர் ஏ காதர், கட்சியின் தேசிய இளைஞர் அமைப்பாளரும் பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளருமான எஸ்.எம்.எம். முஷாரப், கட்சியின் அம்பாறை மாவட்ட செயற்குழு செயலாளர் ஏ.சி. சமால்தீன் உட்பட கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். (அ)

# மினி சூறாவளி தாக்கத்தினால் பல இடங்களில் பெரும் பாதிப்பு

அம்பாறை, ஒக். 23

சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன் தினம் மாலை அட்டாளைச்சேனை பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளி தாக்கத்தினால் அட்டாளைச்சேனை பொது மையவாடி மற்றும் மீலாத் நகர் பகுதியிலும் சுற்று மதில்கள், தகட்டு வேலிகள்,வீட்டின் கூரைகள் என்பன உடைந்து சேதமடைந்துள்ளன.

நேற்று முன் தினம் மாலை 5.00 மணியளவில் வீசிய மினி சூறாவளியினால் அட்டாளைச்சேனை 6ஆம் பிரிவில் அமைந்துள்ள பொது மையவாடியின் சுற்று மதில்கள் முற்றாக உடைந்து சேதமடைந்துள்ளன.

அதேபோன்று மீலாத் நகரில் உள்ள குடியிருப்பாளர்களின் சுற்று மதில்கள், தகட்டு வேலிகள், வீட்டின் கூரைகள் என்பனவும் உடைந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது இப்பிரதேசங்களில் மாலை நேரங்களில் காலநிலை மாற்றம் ஏற்பட்டு வருவதுடன் காற்றுடன் கூடிய மலையும் பெய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (அ)

# கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி குறித்து யுனிசெவ் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

திருமலை, ஒக். 23

கிழக்கு மாகாணத்திற்கு யுனிசெப் அமைப்பின் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், அந்த அமைப்பின் தலைமையீடு மற்றும் கிழக்கு மாகாணத்தில் நிலவும் பிரச்சினைகள் குறித்து முன்னுரிமையுடன் கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் இலங்கையில் உள்ள யுனிசெப் அமைப்பின் பிரதிநிதி எம்மா பிரிக்ஹம் தலைமையளித்தனர்.

இதன்போது முக்கியமாகக் கல்வி மற்றும் சுகாதார துறைகள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலனுக்காக இலங்கை அரசாங்கம் எடுத்த முக்கியமான முடிவுகளைப் பற்றி யுனிசெப் பிரதிநிதி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணக் கல்வி மற்றும் சுகாதார அமைச்சின் செயலாளர்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக சேவை துறைகளின் மாகாண பணிப்பாளர்களும், அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (அ)

# தாண்டியடியில் யானைகளின் அட்டகாசம்! பெறுமதியான தென்னை மரங்கள் அழிப்பு!!

அம்பாறை, ஒக். 23

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச தாண்டியடி உமிரி பிரதேசம் அண்மைக் காலமாக காட்டு யானைகளின் பாரிய அட்டகாசத்திற்கு இலக்காகி வருகிறது.

அவை அங்குள்ள பெறுமதி வாய்ந்த நூற்றுக்கணக்கான தென்னைகளின் குருத்தை உண்டு அழித்து வருகிறது.

இதனால் பல நூற்றுக்கணக்கான தென்னை மரங்கள் மற்றும் தென்னம் பிள்ளைகள் குருத்தின்றி அடியோடு சாய்ந்து கிடக்கின்றன.

தேங்காய்களுக்கு நிலவும் தட்டுப்பாடு மற்றும் மௌசுக்கு மத்தியில் இவ்வாறு வீணாக அவைகள் அளிக்கப்பட்டு வருவதையிட்டு தோட்டக்காரர்கள் கவலையும் விரக்தியும் அடைந்துள்ளனர்.

அங்குள்ள தோட்டங்கள் காணிகளுக்கு தினமும் பகல் இரவு வேளைகளில் காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக தொடர்ச்சியாக வருகின்றன .

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் வந்து விரட்டினாலும் மீண்டும் வந்து பாடுபட்டு நட்டு வளர்த்த பயிர்களை அழித்து வருகின்றன.

யானைகளை விரட்ட முற்பட்ட பொதுமக்களை அவை தாக்கியும் வருகின்றன. இந்த வருடத்தில் மட்டும் அப்பகுதியில் மூவர் யானையால் கொல்லப்பட்டுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக கவனத்தில் கொண்டு தென்னை களையும் பயிர்களையும் மக்களையும் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுள்ளனர். (அ)

# 23 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கிழக்கு மாகாணத்துக்கு நியமனம்!

திருமலை, ஒக். 23

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில், ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட 23 தொழில்நுட்ப அதிகாரிகளுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று முன் தினம் திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

தற்போது கிழக்கு மாகாணத்தில் 59 தொழில்நுட்ப அதிகாரி வெற்றிடங்கள் நிலவி வருகின்றன. இதனால், அரசாங்கம் ஒதுக்கிய மூலதன நிதிகளைப் பயன்படுத்தி அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள சிரமங்களை சமாளிக்கும் நோக்கில் இந்நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதாக ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், எதிர் வரும் ஆண்டில் மாகாண சபைக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என்பதால், திட்டங்களைச் சிறப்பாக நடைமுறைப்படுத்தும் நோக்கில் இத்தொழில்நுட்ப நியமனங்கள் முக்கிய பங்கு வகிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

120 இற்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்களில் இருந்து நேர்முகத் தேர்வுகளுக்குப் பின் தகுதியான 23 பேர் ஒப்பந்த அடிப்படையில் நியமனக் கடிதங்களை இதன் போது பெற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிமோனியா...

வயிற்றோட்டமும் ஏற்பட்டது. இந்நிலையில் புத்தூர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார். வீட்டுக்கு வந்த அவர் கதிரையில் இருந்தவாறே உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். நிமோனியா தொற்றினால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## போதை மாத்திரை...

அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாண பொலிஸ் போதை தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. விசாரணைகளின் பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## போதைப்பொருள்...

வாராந்த அமைச்சரவை ஊடக சந்திப்பில் உரையாற்றிய பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சருமான எவ்.யு. வூட்லர் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

தவறான செயல்களில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்ட எந்தவொரு நபரும், தகுதி அல்லது பதவியைப் பொருட்படுத்தாமல் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் உறுதிபடுத்தினார்.

கடல் வழியாக அதிக அளவில் மெத்தம்பேட்டமைன் (ஐஸ்) மற்றும் ஹஷிஷ் கடத்தப்படுவது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து இந்த விசாரணை நடத்தப்பட்டது.

முன்னாள் சிரேஷ்ட போதைப்பொருள் அதிகாரிகள் இந்த சட்டவிரோத பொருட்களை கொண்டு செல்வதற்கு உதவியதாக ஒரு நபர் குற்றம் சாட்டியதாக சமூக ஊடக அறிக்கைகளை மேற்கோள் காட்டி ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறினார். (அ)

## மணற்காட்டில்...

ஒன்றில் வந்த சிங்கள மொழி பேசுபவர்கள், தனியார் காணிகள் உட்பட அரச காணிகள் மற்றும் சமூக காடாக பிரகடனப்படுத்தப்பட்ட சவுக்கு மரக்காடு உட்பட 300. ஏக்கர் காணியை கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் அபகரிப்பதற்கு நில அளவை செய்ய முற்பட்டுள்ளனர்.

அங்கு காணி அளவீடு செய்வதனை அவதானித்த கிராம மக்கள், உடனடியாக அவ்விடத்துக்கு சென்று காணியை அளவீடு செய்யவிடாது தடுத்துள்ளனர்.

குறித்த சிங்கள மொழி பேசுபவர்கள் மக்களை மிரட்டும் தொனியிலும் செயற்பட்ட நிலையிலும் மக்களின் கடும் எதிர்ப்பினால் அங்கிருந்து வெளியேறி வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு சென்று அங்கிருந்து மீண்டும் அளவீடு செய்யும் நோக்கில் மணற்காடு நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு தயாராக நின்றதை அறிந்திருந்த அவர்கள் செம்பியன்பற்று பிரதேசத்திலிருந்து திரும்பிச் சென்றனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த கிராம மக்கள், தம்மில் பலருக்கு குடியிருக்கவே காணிகள் இல்லாத நிலை உள்ளோம். இந்நிலையில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலரால் இந்தக் காணிகள் வழங்கப்பட்டன இதனை நாம் எதிர்க்கிறோம். ஒருபோதும் இவ்விடயத்தை அனுமதிக்கப்போவதில்லை-என்றனர். (அ)

## மக்கள் பிரதிநிதி...

காயமடைந்த அவர் தற்போது உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (அ)

## சீரற்ற...

உறவினர் வீடுகளில் தங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் திம்பிரிகஸ்யாய பகுதியில் 30 பேர் பாதுகாப்பு முகாம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

## குறிகாட்டுவான்...

தீவுகளுக்கான பயணங்களை மேற்கொள்ளும் படகுகளும், பொருட்களை கொண்டு செல்வதற்கான படகுகளும் குறிக்கட்டுவானிலிருந்தே இயக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கொழும்பிலிரு...

வீதியின் வவுனியா, பறையனாளங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெரியகட்டு பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் மேலும் பத்து பேர் காயமடைந்துள்ளனர்.காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக செட்டிக்குளம் வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

குறித்த சொகுசு பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்கு உள்ளாகியுள்ளதாக தெரிய வருகின்றது. விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பறையனாளங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெலிகம...

அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் இந்த துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளனர்.

இதனையடுத்து அவர் உடனடியாக மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் உறுதிப்படுத்தியுள்ளன. சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களை கைது செய்வதற்கான நடவடிக்கையினை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை- ஐக்கிய மக்கள் சக்தியின் வெலிகம பிரதேச சபைத் தலைவர் லசந்த விக்ரமசேகர கொலை செய்யப்பட்ட சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள 4 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சர் எவ். யூ.வூட்லர் இதனைத் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் உயிரிழந்துள்ள வெலிகம பிரதேச சபை தலைவர், பாதாள குழுவுடன் தொடர்பு பட்டவர். அவருக்கு எதிராக ஆறு வழங்குகள் உள்ளன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

வெலிகம பிரதேச சபைக்குள் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

"பாதாளக்குழுக்களுக்கிடையிலான மோதலின் விளைவாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அவர் மக்கள் பிரதிநிதி என்றபோதிலும் பாதாள குழுவுடன் தொடர்புபட்டவர். கொலைகளை நாம் அனுமதிப்பதில்லை. மேற்படி சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணை இடம்பெறுகின்றது."எனவும் அமைச்சர் கூறினார். (அ)

# சுகாதார அவசர நிலை வைத்திய உதவிகள் தேவைப்படுவோருக்கு தொலைபேசி இலக்கம்

கொழும்பு, ஒக். 23

சீரற்ற வானிலை காரணமாக ஏற்படும் சுகாதார அவசரநிலை மற்றும் வைத்திய உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு உதவுவதற்காக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தால் தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார அவசரநிலை மற்றும் வைத்திய உதவிகள் தேவைப்படுபவர்கள் 077 450 6602 என்ற தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

24 மணித்தியாலங்களும் செயற்படும் வகையில் இந்த விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# 9 மாதங்களில் விமானங்கள் ஊடாக 7.56 மில்லியன் பயணிகள் பயணம்!

கொழும்பு, ஒக். 23

கடந்த ஒன்பது மாதங்களில் நாட்டின் மூன்று முக்கிய சர்வதேச விமான நிலையங்கள் (கட்டுநாயக்க, மத்தள, யாழ்ப்பாணம்) வழியாக மொத்தம் 7.56 மில்லியன் (75.6 இலட்சம்) பயணிகள் பயணித்துள்ளதாக விமானம் மற்றும் விமான நிலைய சேவைகள் நிறுவனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், சர்வதேச பயணிகள் போக்குவரத்து 14.08 வீதம் அதிகரித்துள்ளது.

விமானப் போக்குவரத்தின் எண்ணிக்கையும் 15.35 வீதம் உயர்ந்துள்ளது.

வருகைப் பயணிகள் 49.15 வீதமாகவும், புறப்பாட்டுப் பயணிகள் 50.85 வீதமாகவும் இருந்தனர்.

இடைவழிப் பயணிகள் 6,80,000 இற்கு மேல் நிலையாக இருந்துள்ளனர்.

விமானம் மூலம் வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.7 மில்லியன் ஆகும். இது மொத்த வருகையில் கிட்டத்தட்ட 46 வீதத்தை உள்ளடக்கியது.

உள்நாட்டுப் பயணச் சந்தையும் 54 வீதமாக சமநிலையில் உள்ளது.

சரக்குப் போக்குவரத்து மட்டும் 4.01 வீதம் குறைந்து 140,569 மெற்றிக் தொன்களாக உள்ளது.

உலகளாவிய சரக்கு நடவடிக்கைகள் இயல்பு நிலைக்குத் திரும்பியதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. (அ)

# பத்மேயின் ரூபாய் 50 மில்லியன் மதிப்புள்ள சொத்துகள் பறிமுதல்!

கொழும்பு, ஒக். 23

பாதாள உலகக் கும்பலின் தலைவர் கெஹல்பத்தர பத்மேயினால் சட்டவிரோதமாக சேர்க்கப்பட்ட 50 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் சட்டவிரோத சொத்துக்கள் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில், இந்தோனேசியாவில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையில் கெஹல்பத்தர பத்மே உள்ளிட்ட பாதாள உலகக் கும்பலின் செயற்பாட்டாளர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் விசாரணைகளுக்கமைய, பல்வேறு நடவடிக்கைகளை பொலிஸாரும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் எடுத்து வருகின்றனர். (அ)

## பிறந்து...

வைத்தியசாலையில் பிறந்துள்ளது. பின்னர் அன்றைய தினமே தாயும் சேயும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். குறித்த குழந்தை நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது.

குழந்தையின் சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். குடல் இறக்கம் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## மின்சாரம்...

காலை 10 மணியளவில் தனது வாயினால் மின்சார ஆழி குதையினுள் மின் இணைப்புக்காக வயரை செருக முற்படும்போது அவர் மீது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ)

## மூச்செடுப்பதற்கு...

போதனா வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அன்றிரவே உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். வலிப்புடன், நுரையீரலில் ஏற்பட்ட கிருமித்தொற்று காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## தமிழகத்தை...

வடக்கு தமிழக கடற்கரையைக் கடக்கும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதன் காரணமாக நாட்டை சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது அதிகரித்து வீசக்கூடும்.

அத்துடன் மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்கள் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 75 மில்லிமீற்றர் வரை பலத்த மழை பெய்யக்கூடும் எனவும் அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே, பலத்த மழை காரணமாக களு, நில்வளா, களனி உள்ளிட்ட சில நீர் நிலைகளின் நீர்மட்டமும் உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனால், குறித்த நீர் நிலைகளை அண்மித்த தாழ் நிலங்களில் வசிக்கும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், பலத்த மழையின் காரணமாக இராஜாங்கனை, கலாவெவ, தப்போவ மற்றும் தெதுரு ஓயா உள்ளிட்ட 15 நீர்த்தேக்கங்கள் வான்பாய்வதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, 11 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பயங்கரவாத சட்ட நீக்கம் குறித்து ஒக். 28இல் இறுதி செய்யப்படும்

### அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார

கொழும்பு, ஒக். 23

**புதிய பயங்கரவாத தடைச்சட்டம் எதிர்வரும் 28 ஆம் திகதி இறுதிப்படுத்தப்படும். ஒக்ரோபர் முதல் வாரத்தில் இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதில் உள்ள தாமதம் பற்றி எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் நீதி அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாத தடைச் சட்டத்தால் அதிகளவில் பாதிக்கப்பட்டவர்களே நாங்கள். அதனை தக்கவைக்கும் எண்ணம் இல்லை. ஏனினும், சட்டமொன்றை இரத்து செய்யும்போது அதனை விஞ்ஞான்பூர்வமாக மேற்கொள்ளவேண்டும்.

பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட்ட பின்னர் அமுல்படுத்தவுள்ள புதிய சட்டவரைவை தயாரிப்பதற்குரிய குழு எதிர்வரும் 28 ஆம் திகதி கூடவுள்ளது.

அன்றைய தினம் சட்டமூலம் இறுதிப்படுத்தப்பட்டு கையளிக்கப்படும் என எதிர்பார்க்கின்றேன். அவ்வாறு நடந்த பின்பு பொதுமக்கள் கருத்துக்காக சமூகத்தில் ஒரு மாதத்துக்கு விடப்படும்.



ஒக்ரோபர் 28ஆம் திகதி அறிக்கையை குழு வழங்கினால், சட்டமூலம் தயார் என்ற அறிவிப்பை எம்மால் நவம்பர் முதல் வாரத்தில் விடுக்க முடியும். நாட்டின் பாதுகாப்பு கருதி, புதிய சட்டம்வரும் வரை இருக்கும் சட்டத்தை பயன்படுத்த நேரிடும்-என்றார். (அ)

## பாடப் புத்தகம் அச்சிடும் பணி நிறுத்தப்படவில்லை

கொழும்பு, ஒக். 23

பாடசாலைகளுக்கான பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் நிறுத்தப்படவில்லை என்றும், அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் சில வகுப்புகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது.

இதன்படி அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் அமுலுக்கு வரும் கல்வி சீர்திருத்தங்களின் கீழ் வராத 2 முதல் 5 மற்றும் 7 முதல் 11 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழக்கம்போல் வழங்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக களுவெவ குறிப்பிட்டார்.

அத்துடன் கல்வி சீர்திருத்தங்களின் அடிப்படையில் 1 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கப்படாது. அதற்கு பதிலாக எளிமைப்படுத்தப்பட்ட கற்றல் கையேடுகள் வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் ஆசிரியர்களுக்கான கற்றல் கையேடுகள் அச்சிடும் பணிகள் நிறுத்தப்படவில்லை என்றும், புதிய கல்விச் சீர்திருத்தங்களின் தேவைகளுக்கு ஏற்ப அவை அச்சிடப்படும் என்றும் நாலக களுவெவ தெளிவுபடுத்தினார்.

அத்துடன் 2 முதல் 5, 7 முதல் 11 ஆம் வகுப்புகளுக்கான பாடப்புத்தகங்களும், 1 மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கான கற்றல் கையேடுகளும் தற்போது அச்சிடப்பட்டு வருகின்றன. இவை நவம்பர் 15 இற்குள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கமைய நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பணி டிசெம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் நிறைவடைய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (அ)

## இங்கிலாந்தில் 37 வயதுடைய இலங்கை தமிழர் மீது வழக்கு

லண்டன், ஒக். 23

இங்கிலாந்து சவுத்தாம்ப்டனில் இலங்கைத் தமிழர் ஒருவர் நீதிமன்ற விசாரணையை எதிர்கொள்கிறார்.

37 வயதான அவர், பிரித்தானியாவுக்குள் சட்டவிரோத நுழைந்தமை மற்றும் ஒருவர் மீது நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல் சம்பவம் என்பன தொடர்பில் குற்றச்சாட்டை எதிர்கொள்கிறார்.

குடிவரவு குற்றம், அநாகரீகமான வெளிப்பாடு மற்றும் பொது ஒழுங்கு உள்ளிட்ட குற்றங்களுக்காக 37 வயதான அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தநிலையில் நீதிமன்றில் முன்னிலையான அவர், தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை மறுத்தார்.

இதனையடுத்து விசாரணையை 2026 மார்ச் 10ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிபதி, விசாரணைக்கு முந்திய முன்விளக்க மாநாட்டு விசாரணையை 2025 டிசெம்பர் 15 அன்று நடத்த உத்தரவிட்டார். (அ)

## ஜெனிவா தீர்மானம் குறித்து சபையில் விரைவில் விவாதம்!

### அமைச்சர் விஜித ஹேரத் அறிவிப்பு

கொழும்பு, ஒக். 23

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து, விரைவில் பாராளுமன்ற விவாதம் நடத்தப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் அறிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் கயந்த கருணாதிலக எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே, அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நவம்பர் 4 ஆம் திகதி பாராளுமன்றத்தில் விவாதத்தை நடத்துவதற்கு முன்னர் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தாலும், அன்றைய தினம் வத்திக்கான் வெளியுறவு அமைச்சர் நாட்டுக்கு வருகை தருவதாலும், இரு நாடுகளுக்கும் இடையே பல இருதரப்பு உடன்பாடுகளில் கையெழுத்திட திட்டமிடப்பட்டுள்ளதாலும், இந்த விவாதத்துக்கு வேறு திகதியை நிர்ணயிக்கப்படும்.

வெளிவிவகார அமைச்சின் குழு நிலை விவாதத்தின் போது தொடர்புடைய விவாதத்துக்கான நேரத்தை இரண்டு மணி நேரம் நீடிக்க வாய்ப்பு உள்ளது.

இல்லையேல் பாராளுமன்ற விவகாரக் குழுவில் கலந்துரையாடிய பின்னர் விவாதத்துக்கு வேறு திகதியை நிர்ணயிக்கலாம்-என்றார். (அ)

## பொதுஜன பெரமுனவின் வாக்கு வங்கி அதிகரிப்பு!

### கூறுகிறார் லக்ஸ்மன் யாப்பா

கொழும்பு, ஒக். 23

பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து விலகிச்சென்ற ஆதரவாளர்கள் மீண்டும் கட்சியை நோக்கி வர ஆரம்பித்துள்ளனர். இதன்மூலம் கட்சி வலுவடைந்துவருகின்றது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் அவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியானது 3 சதவீதமாகவே இருந்தது. எனினும், அது 69 லட்சமாக அதிகரித்தது. அதாவது பொதுஜன பெரமுனவுக்குரிய 66 லட்சம் வாக்குகளே தேசிய மக்கள் சக்திக்கு சென்றடைந்தது.

ஆனால் தற்போது ஆதரவாளர்கள் கட்சியை நோக்கி வருகின்றனர். கிராமிய மட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சி பலமடைந்துவருகின்றது.

2029 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. எனவே, தற்போதே ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய அறிவிப்பை கட்சி விடுக்காது-என்றார். (அ)

## நாட்டில் பல மருந்தகங்களில் பயிற்சி பெறாத ஊழியர்கள்!

### அரச மருந்தாளர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 23

நாட்டில் உள்ள பல மருந்தகங்களில் தகுதியற்ற மற்றும் பயிற்சி பெறாத ஊழியர்கள் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் உள்ளிட்ட மருந்துகளை வழங்குவது குறித்து அரச மருந்தாளர்கள் சங்கம், அரசாங்கத்தை எச்சரித்துள்ளது.

சுகாதார அதிகாரிகளுடன் இது தொடர்பாக பல முறை பேச்சுவார்த்தை நடத்தியபோதிலும், இந்த நிலைமை இன்னும் தொடர்வதாகத் சங்கத்தின் செயலாளர் சமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்-

மருந்தகங்களில் பணிபுரியும் தகுதியற்ற நபர்கள், மருந்துகளின் பக்க விளைவுகள் குறித்து அறிவில்லாததால், நோயாளிகளுக்குச் சரியான ஆலோசனைகளை வழங்க முடியாது.

மிக முக்கியமாக, இவர்கள் வாடிக்கையாளர்களுக்கு மருத்துவரின் மருந்துச் சீட்டு இல்லாமல் நுண்ணுயிர் எதிர்ப்பிகளை வழங்குகிறார்கள். இது நுண்ணுயிர் எதிர்ப்பிகளின் தவறான பயன்பாட்டுக்கு வழிவகுக்கிறது.

இதன் விளைவாக நுண்ணுயிர் எதிர்ப்புத் திறன் அதிகரிக்கிறது.

இது நாட்டின் பொது சுகாதாரத்துக்கு பெரும் அச்சுறுத்தலாகும்.

இந்த மோசமான நிலைமை உடனடியாகக் கவனிக்கப்பட்டு, நாட்டின் அனைத்து மருந்தகங்களிலும் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள் கட்டாயம் பணிபுரிய வழிவகை செய்யவேண்டும்-என்றார். (அ)

## லக்மாலி ஹேமச்சந்திரவுக்கு எதிராக நீதி சேவை ஆணைக்குழுவில் முறையீடு

கொழும்பு, ஒக் .23

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமச்சந்திரவுக்கு எதிராக புதிய மக்கள் முன்னணி நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளது.

புதிய மக்கள் முன்னணியின் கொலன்னாவ தொகுதி அமைப்பாளர் அஜித் புஷ்பகுமார, செயற்குழு உறுப்பினர் ஜயசிங்க, சீதாவக்க பிரதேச சபை உறுப்பினர் நாலக்க பண்டார மற்றும் இரத்மலானை அமைப்பாளர் சமன் ரணதுங்க ஆகியோர் இணைந்து, சட்டத்தரணியான லக்மாலி ஹேமச்சந்திர நீதிமன்றத்தை அவமதித்ததாகக் கூறி, நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் கடிதத்தைச் சமர்ப்பித்து இந்த முறைப்பாட்டை அளித்தனர்.

முறைப்பாட்டைச் சமர்ப்பித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சீதாவக்க பிரதேச சபை உறுப்பினர் நாலக்க பண்டார, "சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர கடந்த திம்பிரிகஸ்யாய பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில், ஒரு அரச நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்ட நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றைப் பகிரங்கமாக விமர்சித்ததுடன், அந்தத் தீர்ப்பைப் பொருட்படுத்தாமல் செயற்படுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

எனவே, நாட்டின் நீதிமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்காக சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திரவுக்கு எதிராகச் சட்டம் உடனடியாக அமுல்படுத்தப்பட்டு, அவருக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று நீதிச் சேவை ஆணைக்குழுவிடம் கோருகிறோம்.

இதற்கு முன்னர் நீதிமன்றத்தை அவமதித்த எஸ்.பி. திஸாநாயக்க போன்ற அரசியல்வாதிகளுக்கும் எதிராகச் சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டது. லக்மாலி ஹேமச்சந்திர விடயத்தில் எடுக்கப்படும் முடிவை நாங்கள் அவதானிப்போம்.

லக்மாலி ஹேமச்சந்திர உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். அவரது சட்டத்தரணி தகுதி இரத்துச் செய்யப்பட வேண்டும். நீதிச் சேவை ஆணைக்குழு இந்த விடயம் குறித்து எடுக்கும் முடிவை நாடே உற்று நோக்குகிறது"-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு [illegible] லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.10.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org